சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டப் பணிகள் செயல்படுத்த 2012–2013–ம் நிதியாண்டில் ரூ.50.00 கோடி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே–1(1)) துறை

அரசு ஆணை (D) எண். 21 நாள் 28.01.2013

தை 15–ம் நாள், திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்க

1. அரசு கடிதம் எண்.6946/பமே1(1)/2012–7, நாள் 31.8.2012

2. பழங்குடியினர் நல இயக்குனர் கடிதம் ந.க.எண்.TD/A2/ 957/2012 நாள் 29.10.2012.

---

ஆணை:-

பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டப் பணிகள் செயல்படுத்த 2012–2013–ம் நிதியாண்டில் ரூ.50.00 கோடி ஒதுக்கப்படுகிறது என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கேற்ப முதலாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் முன்மொழிவுகள் கோரப்பட்டது. பழங்குடியினர் நல இயக்குனர், நிதித்துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் அறையில் 25.7.2012 அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின்படி கீழ்க்கண்டவாறு திருத்திய கருத்துரு கோரப்பட்டது.

| வ.எண் | துறைத்தலைவர் | தொகை (கோடியில்) |
|---|---|---|
| 1. | முதன்மை வனப் பாதுகாவலர் | 20.28 |
| 2. | தாட்கோ | 17.08 |
| 3. | இயக்குநர், பழங்குடியினர் நலம் | 04.13 |
| 4. | குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) | 02.38 |
| 5. | இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை | 03.97 |
| 6. | பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் | 02.16 |
| | மொத்தம் | 50.00 |

2. மேலே உள்ள அட்டவணையில் காணும் திருத்திய கருத்துருவினை பழங்குடியினர் நல இயக்குநர் அரசுக்குக் கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்து ஒப்புதல் வேண்டியுள்ளார்.

| வ. எண் | துறைத்தலைவர் | மூலதனம் ரூபாய் இலட்சத்தில் | வருவாய் ரூபாய் இலட்சத்தில் | மொத்தம் ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | முதன்மை வனப் பாதுகாவலர் | 1515.00 | – | 1515.00 |
| 2. | இயக்குநர், பழங்குடியினர் நலம் | 150.00 | 262.50 | 412.50 |
| 3. | தாட்கோ | 1087.00 | 1306.03 | 2393.03 |
| 4. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 216.50 | – | 216.50 |
| 5. | இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை | 318.06 | 78.63 | 396.69 |
| 6. | குடிநீர் வடிகால் வாரியம் | 246.86 | – | 246.86 |
| | மொத்தம் | 3533.42 | 1647.16 | 5000.00 |

3. மேலே பத்தி 2–ல் கண்டுள்ள பழங்குடியினர் நல இயக்குனரின் கருத்துருவினை நன்கு பரிசீலித்து, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2012–2013–ம் ஆண்டுக்குக் கீழ்கண்டவாறு ரூ.50.00 கோடி (ரூபாய் ஐம்பது கோடி மட்டும்)க்கான திட்டங்களை செயல்படுத்த நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

| வ.எண் | திட்டங்கள் | வருவாய் கணக்கு | மூலதன கணக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|
| I | வனத்துறை | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | கச்சா வீடுகள் மேம்படுத்துதல் | 220.00 | – | 220.00 |
| 2. | சாலை மேம்பாடு | – | 590.00 | 590.00 |
| 3. | பள்ளிகள் மேம்பாடு | 200.00 | – | 200.00 |
| II | இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை | | | |
| 1. | பழங்குடியினர் நலப்பள்ளிகள் விடுதிகளை சீரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் | 150.00 | – | 150.00 |
| 2. | கிராமங்களுக்கு குடிநீர் வழங்குதல் (TWAD) | – | 250.00 | 250.00 |
| 3. | பொருளாதார மேம்பாடு (TAHDCO) | 1000.00 | – | 1000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | திறன் கட்டமைப்பு பயிற்சி (TAHDCO) | 140.00 | – | 140.00 |
| III | இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை | | | |
| 1. | தொழிற்பயிற்சி நிறுவனங்கள் துவக்குதல் (கருமந்துறை, கொல்லிமலை, ஜமுனா மரத்துார் ஆனைக்கட்டி, கூடலூர் ) | 1075.00 | 1375.00 | 2450.00 |
| | மொத்தம் | 2785.00 | 2215.00 | 5000.00 |

4. மேலும், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் (ITI) அமைக்கும்போது ஏற்படும் தொடரும், தொடராச் செலவினங்களை கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்தும், அரசு ஆணையிடுகிறது..

| வ.எண் | செலவின விவரம் | ரூபாய் கோடியில் |
|---|---|---|
| தொடராச் செலவினம் **(Non recurring)** | | |
| 1. | <u>மூலதனக் கணக்கு</u><br>அ. தொழிற்கூடக் கட்டிடக் கட்டுமானச் செலவு<br>ஆ. விடுதிகள் கட்டிடம் | <br>**2.00**<br>**0.75** |
| 2. | <u>வருவாய் கணக்கு</u><br>அ. தொழிற்கருவிகள் மற்றும் உபகரணங்கள்<br>ஆ. அறையமர்வுப் பொருள்கள் | <br>**1.15**<br>**0.25** |
| <u>தொடரும் செலவினம்</u> | | |
| 1. | <u>வருவாய் கணக்கு</u><br>அ. நிர்வாகச் செலவினங்கள் | <br>**0.75** |
| | மொத்தம் | **4.90** |

5. மேலும் தொழிற்பயிற்சி நிறுவனம் அமைத்தலில் செலவினம் இனிவரும் ஆண்டுகளில் ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு கோரி பல்வேறு துறைகளிலிருந்து பெறப்படும் கருத்துருக்களை வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டிற்கு ஏற்ப கூர்ந்தாய்வு செய்து ஒப்புதல் வழங்க கீழ்காணும் உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழு தோற்றுவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | செயலாளர்,<br>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | தலைவர் |
| 2. | செயலாளர்,<br>நிதித்துறை (Expenditure) | உறுப்பினர் |
| 3. | இயக்குநர்,<br>பழங்குடியினர் நலம் | உறுப்பினர் |

6. மேலும், தாட்கோ, குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்க இயக்குநர் பழங்குடியினர் நலம் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் தாட்கோவின் திறன் கட்டமைப்பு பயிற்சி தொடர்பாக மாநில திறன் கூட்டமைப்பு பயிற்சி மையத்தின் மூலம் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்றும், பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.10.00 கோடியானது ஆதிதிராவிடர்களுக்கென அளிக்கப்படும் சிறப்பு மைய உதவித் திட்டத்தினை போன்று அரசு மானிய உதவித் தொகையாக பழங்குடியினருக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், மீதித்தொகையினை தாட்கோவின் பயனாளிகள் வங்கிக் கடன் மூலம் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யலாம் என்றும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும், பொருளாதார மேம்பாடு மற்றும் திறன் கட்டமைப்பு பயிற்சி ஒதுக்கீடுகளில், சிறப்பு மைய நிதியுதவி திட்டங்களில் தாட்கோவிற்கு அனுமதிக்கப்பட்ட அளவில் நிர்வாக செலவினம் வழங்க அனுமதியளிக்கப்படுகிறது.

7. மேலும், 2012–2013 ஆம் ஆண்டிற்கு மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்படும் இனங்களின் விரிவான திட்ட மதிப்பீட்டின் மீது பத்தி 5–ல் உள்ள குழுவின் ஒப்புதல் பெறப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

8. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பிரித்து பற்று வைக்கப்படவேண்டும்.

> 4225 – ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 02 – பழங்குடியினர் நலன் – 796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – JA – விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 16 – பெரும் பணிகள்
> (த.தொ.கு. 4225 – 02 – 796 – JA – 1602)

> 2225 – ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் – 796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – JY – வரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 09 – உதவித் தொகை – 01 – நடப்புச் செலவுக்கான உதவித் தொகை
> (த.தொ.கு. 2225 – 02 – 796 – JY – 0912)

9. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள 2012–2013–ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு மேல் தேவைப்படும் கூடுதல் தொகை 2012–2013–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும் இச்செலவினம் நாளடைவில் துணைமானிய கோரிக்கையில் சேர்க்கப்பட்டு சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். 2012–2013ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தினை மேற்கொள்ள இயக்குநர், பழங்குடியினர் நலத்துறைக்கு அனுமதியளிக்கப்படுகிறது. 2012–2013–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த

மதிப்பீடு / துணைமானிய கோரிக்கைக்கான கருத்துருக்களை நிதி (ஆதி(ம)பந) துறைக்கு அனுப்பும் போது இதனையும் சேர்த்து அனுப்புமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. மேலே பத்தி 2–ல் தாட்கோவிற்கு ஒப்பளிக்கப்பட்ட தொகையினை காசாக வழங்காமல் காசோலை மூலம் கீழ்காணும் தன் பெயர் வைப்பீடு கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்

K – Deposit and Advances (b) Deposit not bearing interest –
8443-00 Civil Deposits – 800 – Other Deposits – By – Deposits of Tamil Nadu Housing Development Corporation Limited (TAHDCO)
(DPC 8443 00 800 BY 0004) (Out go)
(DPC 8443 00 800 BY 000G) (Receipts)

11. இவ்வாணை நிதித்துறையின் அ.சா எண். 4260/FS/P/2012 நாள் 5.1.2013 ஒப்புதல் பெற்று மற்றும் கூடுதல் நிதிபொதுக்கப் பேரேட்டு எண். 2072 (இரண்டாயிரத்து எழுபத்து இரண்டு) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தங்க கலியபெருமாள்
அரசுச் செயலாளர்(பொ)

பெறுநர்,
பழங்குடியினர் நல இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5.
முதன்மை வனப் பாதுகாவலர், பனகல் மாளிகை, சென்னை – 15.
மேலாண்மை இயக்குனர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதிக்கழகம், சென்னை – 101.
மேலாண்மை இயக்குநர், குடிநீர் வடிகால் வாரியம், சென்னை –5.
இயக்குநர் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை – 32.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், சென்னை – 10.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/6/35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –5.
நகல் :-
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதியமைச்சரின் நேர்முக உதவியாளர்,சென்னை – 9
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை – 9
அமைச்சர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்(ஆதி(ம)பந) (வரவு செலவு பொது–I / வரவு செலவு பொது– II துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

28.1.13
பிரிவு அலுவலர்